**STC No.311/2022**
**Date 18.04.2024**
**PW : 1**
**பெயர் - சரவண ராஜா த-பெ.**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது தாத்தாவிற்கு சொந்தமான நிலம் வடுவச்சிமதிலில் உள்ளது. மேற்படி நிலத்தின் ஒரு பக்கம் குளம், வடக்கு பக்கம் மெயின் ரோடு, தெற்கு பக்கம் எனது மாமா பாண்டியின் இடம், மற்றொரு பக்ககும் மெயின் ரோடு. நான் ஒத்திக்கு வாங்கி பயிர் செய்யும் நிலமும் தாத்தா நிலத்திற்கு அருகில் தான் உள்ளது. அது மாமா பெரியசாமியின் நிலம்.

விவசாயம் செய்வது சம்பந்தமாக ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் என்ன மாதிரி ஆவணம் என்று சொன்னால் தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. எனது புகார், பிராமண வாக்குமூலத்தில் கார் விற்பனை செய்வது சம்பந்தமாகவும், விவசாயம் செய்வது சம்பந்தமாகவும் தெரிவித்துள்ளேனா என்றால் விவசாயம் மூலம் வருமானத்தின் மூலம் தான் பணம் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளேன்.

பிரமாண வாக்குமூலத்தின் முதல் விசாரணை சாட்சியத்தில் விவசாயத்தினை வைத்து தான் கடன் அளித்துள்ளதாக குறிப்பிட்டு தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். கடன் அளித்த தேதியில் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்று ஞாபகஉள்ளதா என்றால் ஞாபகமில்லை. நான் எனது வங்கி கணக்கில் பணம் இல்லாதத காரணத்தினால் தான் ரொக்க இருப்பு பற்றி ஞாபகமில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பணம் அளிக்கும் போது என்னுடன் இருந்ததாக தெரிவிக்கப்படும் எனது தங்கை செல்வநாயகியை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால் அவர் வெளியூரில் உள்ளார் நான் பணம் அளித்தேன் எதிரி வாங்கியுள்ளார். எனக்கு வர வேண்டிய பணம் ரூ.75000/- த்தினை யாரிடமிருந்து பெற்று எதிரியிடம் கொடுத்தேன் என்றால் எனது அத்தான் சுடலைகண்ணுவிடம் வாங்கி கொடுத்தேன். மேற்படி சுடலைகண்ணுவினை சாட்சியமாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். அவர் எனக்கு பணம் கொடுத்தது மட்டும் தான் தெரிவிப்பார்.

எனக்கு இராதாபுரத்தில் வீடு கிடையாது. எனது தந்தைக்கு ஏர்வாடியில் வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான் ஆனால் எந்தெந்த வங்கியில் கணக்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. ஏர்வாடிக்கும் இராதாபுரத்திற்கும் சுமார் 30 கி.மீ தூரம்

இருக்கும்.

உங்கள் தந்தை ஏர்வாடியில் உள்ள வங்கியில் எதிரி அளித்த காசோலையை தாக்கல் செய்யாமல் எதற்காக இராதாபுரத்தில் உள்ள வங்கியில் தாக்கல் செய்தார் என்று கேட்டு தெரிந்து கொண்டிற்களா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. எதிரியை சிரம படுத்த வேண்டும் என்று கெட்ட எண்ணத்தில் தான் வெவ்வேறு நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எதிரிக்கு இதற்கு முன்னாடி கடன் எதுவும் அளித்துள்ளீற்களா என்றால் அப்அப்போ கேட்பார் கொடுத்துள்ளேன். எதிரி சுமார் ரூ.10000/-, ரூ.50000/- கேட்பார் மறுநாள் திரும்பி தருவார். மேற்படி பணத்திற்கு நான் காசோலை வாங்கி உள்ளேனா என்றால் வாங்கவில்லை. இவ்வழக்கின் பரிவர்த்தனைக்கு என்ன ஆவணம் நான் எதிரியிடம் கேட்டேன் என்றால் எதிரி என்னிடம் காசோலை கொடுத்தார் நான் எந்த காசோலையும் கேட்கவில்லை எதிரி காசோலை கொடுத்ததால் வாங்கி கொண்டேன்.

எதிரி வேலைக்கு செல்லாமல் வீட்டில் தான் இருக்கிறார் அதனால் அவருக்கு வருமானம் இல்லை என்று நன்கு தெரிந்து தான் எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் எதிரியின் கணவர் உடன் வந்து தான் பணம் கேட்டார் அவர் டைல்ஸ் காண்ட்ராக்ட் எடுத்து செய்வதாலும் அவர்கள் எப்போதும் வாங்கி திரும்ப தந்துவிடுவதாலும் நான் பணம் கொடுத்தேன்.

பணம் வாங்கும் போது எதிரி கணவர் உடன் இல்லை. வருமான வரி கணக்கு தாக்கல் செய்யும் போது எனக்கு வரும் வருமானம், நான் பெற்ற கடன்கள், நான் கடன் அளித்த விபரம் மற்றும் இழப்புகளை குறித்து தெரிவிக்க வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு கடன் அளிக்காத காரணத்தினால் தான் கடன் வழங்கியது குறித்து வருமான வரி கணக்கில் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

உங்களுக்கு எதிரிக்கு மனநிலை சரியில்லை என்ற விபரம் உங்களுக்கு தெரியாமா என்றால் தெரியாது. எதிரி மனநிலை சரியில்லை என்றும் அவர் எந்த காலத்திலும் உங்களிடம் பணத்தினை கடன் பெற்று காசோலை எதுவும் அளிக்கவில்லையென்றும் இந்த புகார் மூலம் உங்களுக்கு பரிகாரம் கிடைக்க அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் அளித்த பணம் 2 இலட்சத்தினை அளிக்கும் அளவுக்கு வருமானம்

இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக தாக்கல் செய்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. உங்களுடைய தந்தை எதிரியின் கணவரிடம் இலவச வீட்டு மனை வாங்கி தருகிறேன் என்று சொல்லி எதிரியின் காசோலையை பெற்று மோசடியாக அவர் வாங்கிய காசோலையை உங்களிடம் மோசடியாக கொடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.